FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## தவணைப் பரீட்சை, யூலை - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, July - 2019

| தரம் :- 12 (2020) | இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| *1) 5* | *6) 4* | *11) 3* | *16) 1* | *21) 1* |
| *2) 1* | *7) 1* | *12) 5* | *17) 4* | *22) 4* |
| *3) 3* | *8) 3* | *13) 1* | *18) 5* | *23) 2* |
| *4) 2* | *9) 2* | *14) 2* | *19) 2* | *24) 5* |
| *5) 4* | *10) 5* | *15) 4* | *20) 3* | *25) 3* |

(25X4=100 புள்ளிகள்)

## பகுதி II

01. **இந்து நாகரிக வளர்ச்சியில் மகா புராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.**

**அ) பொருள் மரபு**

- புராணங்கள், புராதனம், பழமை வாய்ந்தவையாகும்.
- பண்பாடு, சமயம், தத்துவம், கலை, இலக்கியம் வரலாற்றுச் செய்திகள் கூறப்படுகின்றது.
- தெய்வீக வரலாறுகள், தெய்வீக பரத்துவம் கூறப்படுகின்றது.
- பஞ்ச லட்சணம், தச லட்சணம் போன்ற மரபுகள்.
- சமய நெறிகள், வழிபாட்டு முறைகள் போன்றனவும் மூர்த்தி, தலம், தீர்த்தம், தவம், விரதம், தல யாத்திரை தோத்திரம், தீர்த்தம் போன்ற விடயங்கள் பேசப்படுகின்றது.
- மனித கடமைகள், ஆச்சிரம தர்மங்கள், புருடாத்தங்கள் போன்ற தர்ம நெறிகள் சோதிடம், வானியல், சிற்பம், கலை, கணிதம், புவியியல் போன்ற அறிவியல் சிந்தனைகள்.
- அரசியல், தர்மம், கலை மரபுகள் போற்றப்படுகின்றது.

(5 புள்ளிகள்)

**ஆ) சமய நெறி**

- சண்மத நெறிகளின் அடிப்படையிலான விளக்கம்.
- பக்தி நெறி, கடவுள் நம்பிக்கைக்கு முதன்மை வழங்கும் மும்மூர்த்தி வழிபாடுகள்.
- ஆலய வழிபாடுகள், தலயாத்திரைகள், உருவ வழிபாடு போன்றவை.
- வேத அத்தியயனங்களும் தோத்திரங்களும் கிரியை பூசை முறைகள்.
- சண்மத நெறிகளுடன் தொடர்புபடுத்திய விடயங்கள் சிவபரத்துவம், விஷ்ணு பரத்துவம், சக்தி பரத்துவம்.

(5 புள்ளிகள்)

agaram.lk

**இ) தத்துவ மரபுகள்**

- உலகப் படைப்புக்கள் பற்றிய கருத்துக்கள்
- சிவ, விஷ்ணு, சக்தி பரத்துவங்கள்
- பிரமனது உந்திக் கமலத்திலிருந்து உலகம் படைக்கப்பட்டது.
- அவதார தத்துவம் - தர்மம் நிலை நாட்டும் நோக்கு
- தெய்வீக கதைகள் தெய்வீக வடிவங்கள், தத்துவ நோக்குடையவை.
- தவம், விரதம், தீட்சை போன்ற ஆன்மீக நோக்குடைய தத்துவங்கள்.
- சைவ சித்தாந்த தொடர்புகள்.
- கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், கர்மவினை, மறுபிறப்பு, ஆன்மீக வீடுதலை போன்ற விடயங்கள்.

(5 புள்ளிகள்)

**ஈ) முக்கியத்துவம்**

- நண்பர் போல் அறிவுரை வழங்குவது.
- கோயில் வழிபாடு, உருவ வழிபாடு என்பன பற்றிக் கூறுவது.
- சமயக்கருத்துக்களை இலகுபடுத்தியும், எளிமைப்படுத்தியும் கூறும் பாங்குடையது.
- அறநெறிப் போதனை புரிவது
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது
- கலை – புராணங்களை அடிப்படையாகக் கொண்டு திருவுருவ வழிபாடு, சிற்பக்கலை மரபு, ஓவியக்கலை என்பன வளர்ச்சி பெற்றன.
- இலக்கியம் :- இலக்கிய வடிவங்களுக்கும், குறிப்பாக பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் ஆகியவற்றுக்குப் புராணங்கள் பொருள் மரபாக அமைந்துள்ளன.
  பிற்காலக் காவியங்களுக்கு புராணங்கள் முன்னோடியாக அமைவன.
  புராணபடன மரபு வளர அடிப்படையானது.
- சமயம் – புராணங்கள் சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன.
  புராணங்கள் இறைநம்பிக்கையை வலுப்படுத்துவன.
  பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம் முதலான சமய அடிப்படைகளைக் கூறுவன.
  சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், சக்தி முதலான தெய்வங்களின் பரத்துவம் கூறுவன.

(5 புள்ளிகள்)

(4x5=20 புள்ளிகள்)

02. **ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய மேல்வரும் பணிகளை விளக்குக.**

**அ) சமயப்பணி**

- சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை.
  உ+ம் :- நல்லூர் கந்தசாமி கோயில்
- புராணப்படனங்கள் நிகழ்த்தியமை.
- ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை.
- உதாரணம் :- திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம்



agaram.lk

மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்'' என விஞ்ஞாபனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.
  உதாரணம் :- சைவ வினாவிடை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், இலக்கண நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்தல்.
- பண்ணிசையினை வளர்த்தமை.
  உதாரணம் :- நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை.
- பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை.
- பிறசமயக் கண்டனங்களையும் அகச்சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டமை. கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை.
- ''சைவதூஷண பரிகாரம்'', ''நல்லூர் கந்தசாமி கோயில்'', ''யாழ்ப்பாணத்துச் சமய நிலை''

*(5 புள்ளிகள்)*

**ஆ) கல்விப் பணிகள்.**

➢ சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார்.

உதாரணம்

✦ *1848* வண்ணார் பண்ணையிலும் *1864* சிதம்பரத்திலும் *1872* கோப்பாயிலும் வித்தியாசாலைகளை அமைத்தல்.

✦ *1871* புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையை அமைத்தமை.

➢ வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தார்.

➢ முதியோர் கல்வியில் கவனஞ் செலுத்தினார்.

➢ பெண்களுக்கான கல்வி (3 ஆம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்) முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

agaram.lk

*(5 புள்ளிகள்)*

**இ) பதிப்பாசிரியர் பணிகள்.**

- ஈழத்தில் வண்ணார் பண்ணையிலும் தமிழ்நாட்டின் சிதம்பரத்திலும் வித்தியாநுபால யந்திரசாலைகளை நிறுவினார்.
- அகராதிகள் பதிப்பித்தல் உதாரணம் : சூடாமணி நிகண்டு.
- இலக்கிய நூல்கள் - இலக்கண விளக்கச் சூறாவளி
- தருக்க நூல்கள் - தருக்கசங்கிரகம்.
- இலக்கிய நூல்கள் மகாபாரதம்.
- அறிவியல் சார் நூல்கள் - இலங்கை பூமிசாத்திரம்.
- முதன் முதல் ஏட்டுச் சுவடிகளிலிருந்த நூல்களை அச்சுவாகனமேற்றினார்.
  உதாரணம் :- தொல்காப்பிய சூத்திரவிருத்தி.
- தொகுத்துப் பதிப்பித்தமை – அருட்பா
- சில நூல்கள், இலக்கணக் குறிப்புக்கள், அருஞ்சொல் அகராதி, சொல்லிணக்க ஆராய்ச்சிப் பதிப்புக்கள்.
  உதாரணம் :- ஔவையார் அருளிச் செய்த நல்வழி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன்.
- சில செய்யுள் நூல்களை வசன நடையில் எழுதிப் பதிப்பித்தார்.
  உதாரணம் : திருவிளையாடற்புராண வசனம் பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம்.

- அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதிப் பதிப்பித்தார்.
  உதாரணம் :- இலக்கணச் சுருக்கம்
  - "நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு" என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.
  - இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத் துறை வளர்ச்சியுற வித்திட்டமை.
  - இலங்கை நேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை. சைவ உதய பானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை.

(5 புள்ளிகள்)

**ஈ) சமூகப் பணிகள்.**

- 1876 / 77 ஆண்டுகளில் கடும் வரட்சியால் ஏற்பட்ட பஞ்ச வேளையில் கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை.
- யாழ்ப்பாண கரையூர் உள்ளிட்ட இடங்களில் பேதி நோய் பரவிய போது மக்களுடன் மக்களாக நின்று முதலுதவிகளையும் தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டமை.
- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப்பாடுபட்டார்.
- யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார்.
- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார். செய்யுள் நடையிலுள்ள பழங்கால இலக்கியங்களுக்கு உரை செய்தார்.
- பிறரை உரிய வேளையில் கௌரவித்தமை.
  உ+ம் : நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பத்திரசம் சொட்டப் பாடிய கோபாலகிருஸ்ண பாரதியாருக்கு நாவலர் சன்மானம் வழங்கிக் கௌரவித்தமை.
- சுதெசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட தேசிய வீரராகக் காணப்பட்டார்.
- சைவத் தமிழ் மரபிற் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி, இலங்கையின் சைவ மறுமலர்ச்சிக்குக் காரணாமகினார்.

(5 புள்ளிகள்)

(5x4=20 புள்ளிகள்)

03. **சோழப்பெருமன்னர் காலத்தில் சைவசமயம் மேன்மையடைந்தவற்றை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.**

**அ) அரசர்களது பங்கும் பணியும்**

- தமிழகத்தில் இந்து நாகரிகம் வளம் பெறுவதற்கு சோழப் பேரரசர்கள் அரிய பணியாற்றியுள்ளனர். அவர்கள் சைவ நெறியில் தீவிர ஈடுபாடும் அபிமானமும் உடையவராய் இருந்தனர். சிவபாதசேகரன், திருநீற்றுச் சோழன் போன்ற விருதுப் பெயர்களை அவர்கள் சூடியிருந்தமை. சைவ சமயத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் பக்தியையும் வெளிப்படுத்துவனவாகும். நிலையான ஆட்சியால் நாடு வளம் நிறைந்து விளங்கியதோடு இந்துநாகரிகம் பல துறைகளில் வளம் பெற ஏதுவாயிற்று. மன்னர்கள் பெற்ற வெற்றிகளும் சமயத்தின் மீது இருந்த பேரபிமானமும் புதிய ஆலயங்கள் அமைப்பதற்கும் பழைய ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் வழியமைத்தன.

- வடநாட்டிலிருந்து பாண்டியத்தியம் உள்ள பிராமணரை வரவழைத்து வேதம், வேதாங்கங்களைக் கற்பிக்கவும் ஆலயக் கிரியைகளை ஒழுங்காகச் செய்வதற்கும் மன்னர்கள் வழியேற்படுத்தியமை குறிப்பிடபாலது.

agaram.lk

- ஆலயங்களுக்குத் தானங்களையும் மானியங்களையும் வழங்கினர். தானங்கள் வழங்குவதில் மன்னர்களது தேவியரும் பெரும் பங்கு வகித்தனர். சாசனங்களில் நிலம், பொன், காசு முதலிய தானங்களையும் திருப்பணிகளையும் பற்றி அறியலாம். அரசர்களது ஜன்ம நட்சத்திர தினங்களில் சிறப்பான வழிபாடுகள் இடம் பெற்றன.

- வேதவிருத்தி புராணவிருத்தி, பாரதவிருத்தி முதலியவற்றுக்கான மானியங்கள் விடப்பட்டன. ஆலயங்கள் செய்த சேவைகள் பெருகின. ஆதுலர்சாலைகளாகவும் விளங்கின. மடங்கள் ஆலயத்திற்கருகில் எழுந்து சமயப்பணி, கல்விப்பணி மேன்மையடைய உதவின. நாயன்மார்களுக்குப் படிமங்கள் மற்றும் சிவனடியார் குருபூசை சிறப்பிடம் பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

- அவர்களது ராஜகுருவாக விளங்கியவர்கள் அவர்களது சமயப்பணி வளம்பெற உதவினர். விஜயாலயன், பராந்தக சோழன, முதலாம் ராஜராஜன், இராஜேந்திர சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் பல வரலாற்றுப் புகழ் மிக்க கோயில்கள் எழுந்து இந்துநாகரிகம் தமிழகத்தில் வளம்பெற நிலைக்களன்களாக அமைந்தமை குறிப்பிடற்பாலது.

(5 புள்ளிகள்)

**ஆ) கோயில்களும் நுண்கலை வளர்ச்சியும்**

- தமிழகத்தில் சோழர் ஆட்சிக்காலத்தில் நுண்கலைகள் உன்னத வளர்ச்சி கண்டன.
- பல்லவர் அமைத்த அடித்தளத்திலே மகோன்னதமான கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை மரபொன்றினை மன்னர் சோழர் காலத்தில் உருவாக்கினர்.
- பாடல் பெற்ற ஆலயங்கள் இக்காலத்தில் கற்றளிகளாக மாற்றப்பட்டன. அந்தச் சிறப்பு சோழர் காலக்கலைப்பாணியின் வளர்ச்சிக் கட்டங்களோடு தொடர்புடையது.
- மண்டபம், சுற்றுப்பிரகாரங்கள் அமைத்தனர். சிதம்பரத்தின் அமைப்பு ஆறு மடங்கு விசாலத்தில் வளர்ச்சி பெற்றது. திருக்காமக்கோட்டம், நடராசர் சந்நிதி, திருத்தேர் கோயில், ஆயிரங்கால் மண்டபம், எழுநிலைக் கோபுரங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன.
- தமிழகத்துக் கோயிற் கட்டடக்கலை வரலாற்றில் சோழப் பேரரசின் காலம் உன்னத வளர்ச்சிக்காலமாக விளங்கியது. சோழப் பெருமன்னர்களாகிய விஜயாலயன், பராந்தக சோழன், முதலாம் ராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கோயில்கள் பல எழுச்சி பெற்றன. விஜயாலய சோழேச்சரம், இராஜராஜேஸ்வரம், கங்கை கொண்ட சோழேச்சரம், தாராசுரம் - ஐராவதேஸ்வரம், திரிபுவனம் - கம்பஹரேஸ்வரம் போன்ற கோயில்கள் மன்னர்களால் அமைக்கப்பட்டன.
- தமிழகத்தில் இந்துநாகரிகம் மேன்மையடைய சோழப் பெருமன்னரது ஆட்சிக் காலப்பகுதியில் எழுந்த இக்கோயில்களின் சிறப்பம்சங்களை நாம் அறிவதற்கு அவற்றின் கட்டடக்கலைப் பாணியை நான்கு காலத்துக்குரியனவாக வகைப்படுத்தலாம்.

1) விஜயாலயன் முதல் பராந்தகன் வரையுள்ள காலம் (கி.பி. 850 – 950 வரை)
இக்காலத்தில் எழுந்த ஆலயங்களின் அளவு சிறிதாக அமைந்தது. அவை பல்லவர் காலக்கட்டடக்கலைப் பாணியை அடித்தளமாகக் கொண்டவை. விஜயாலய சோழேச்சரம்,

ஆதித் ஈஸ்வரம், மூவர் கோயில், திருச்சிராப்பள்ளி ஸ்ரீநிவாஸ நல்லூரிலுள்ள கோரங்கநாதர் கோயில் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை ஆகமநெறி சார்ந்தவை. வனப்புடன் கூடியவை. அதிஷ்டானம், அர்த்தமண்டபம், விமானம், தேவகோஷ்டம் ஆகிய அம்சங்கள் முக்கியமானவை.

agaram.lk

2) பராந்தகன் முதல் இராஜராஜன் வரையான காலம் (கி.பி 900 – 1000 வரை)
இக்காலப்பகுதியில் கோயில்களைப் பெரிதாக அமைக்கும் வழக்கம் ஏற்படலாயிற்று. பாடல்பெற்ற தலங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. தூண் அமைப்புக்களில் அலங்கார வேலைப்பாடுகள் இடப்பெற்றன.

3) இராஜராஜன் காலம் முதல் குலோத்துங்கனுக்கு முற்பட்ட காலம் வரை(கி.பி 1000 – கி.பி.1017 வரை)
இக்காலத்தில் ஆலயக் கட்டுமானம் மிகப் பிரமாண்டமானதாக வளர்ச்சியுற்றது. தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற கோயில்கள் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

விமானங்கள், தூபி, தூண்கள், மண்டபங்கள், சுற்றுப் பிரகாரங்கள் என்பன எழில் வாய்ந்தவை. கோயிற் கட்டடக்கலை அமைப்பில் விமானங்கள் சிறப்பம்சம், விமானங்கள் ஒகதளம், துவிதளம் முதலாகப் பதினைந்து தளவரிசைகளைக் கொண்டிருந்தன. சிதம்பரத் திருப்பணிகளாக எழுநிலைக் கோபுரம். விமானங்கள் மிகவும் உயரமாக அமைந்தன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் திராவிடக் கட்டடக் கலையின் பூரண வளர்ச்சி நிலையைக் காட்டி நிற்பதாக அறிஞர் பாராட்டியுள்ளனர். விமானம் 216 அடி உயரமும் பதினைந்து தளங்களும் கொண்டது. முழுமையான கருங்கற் சிற்பங்கள் விமானத்தை அழகுபடுத்துவன. தென்திசை மேரு, பெரிய கோயில் பெருவுடையார் போன்ற பெயர்கள் தஞ்சைப் பெருங்கோயிலின் கட்டடக் கலைச் சிறப்பை உணர்த்துவன.

இராஜேந்திரன் கங்கையை வெற்றி கொண்டதன் நினைவாக அமைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழேச்சரம் தஞ்சைப் பெருங்கோயிலின் மறுவடிவம் எனக் கொள்ளப்படுகிறது. இவ்வாலயத்திலும் விமானமே கண்ணையும் கருத்தையும் கவரும் சிறப்புடையது. விமான அமைப்பின் உன்னத வளர்ச்சிக் காலம். சிற்ப அலங்காரங்களும் சித்திர வேலைப்பாடுகளும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. தலா விற்பனர்களையும் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களையும்இன்று வியப்பில் ஆழ்த்தி நிற்கும் இவ்விரு ஆலயங்கள் இந்துநாகரிகத்தின் மேன்மையை உலகறியச் செய்வன என்பது குறிப்பிடற்பாலது. தென்னிந்தியக் கோயிற் கட்டடக்கலை பூரணத்துவம் பெற்றது இக்காலமே.

4) முதலாம் குலோத்துங்கன் முதல் மூன்றாம் இராஜேந்திரன் வரையான காலம் (கி.பி. 1070 – 1250 வரை) ஐராவதேஸ்வரம், கம்பஹரேஸ்வரம் ஆகிய ஆலயங்களை இக்காலத்திற்குரியனவாகக் குறிப்பிடலாம். ஏனைய நுண்கலைகளான சிற்பம், நடனம், ஓவியம், இசை என்பனவும் சோழர் காலத்தில் வளர்ச்சியடைந்தன. சோழர்காலச் சிற்பங்கள் பல திறந்தன. பெருமளவிலானவை கல்லிலும் உலோகத்திலும் அமைக்கப்பட்டன. விக்கிரக்கலை சிறப்படைந்தது. தலைசிறந்த விக்கிரகங்கள் உருவாகின. இக்காலச் சிற்பங்கள் அவற்றின் கலைத்துவச் சிறப்பினால் இந்துநாகரிகத்திற்கு பெருமை சேர்த்தன.

நடனம், ஓவியம் கலைத்துவச் சிறப்பினால் இந்துநாகரிகத்திற்கு பெருமை சேர்த்தன. நடனம், ஓவியம் ஆகிய கலைகள் சிறப்பான வளர்ச்சி கண்டன. நடனக்கலை அரச ஆதரவுடன் ஆலயங்களில் வளர்ச்சியடைந்தன. பெருவுடையார்கோயில், சிதம்பரம், கும்பகோணம், சாரங்கபாணிகோயில் என்பவற்றில் நாட்டியக்கரணச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன. பெருவுடையார்கோயில் ஓவியம் சோழர்கால ஓவியக் கலையின் உன்னதத்திற்குச் சிறந்த உதாரணம். நடராஜர், சுந்தரர் ஓவியங்கள் குறிப்பிடற்பாலன.
இசைக்கலையும் வளர்ச்சி பெற்றது. திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்தல் ஓதுவார்களுக்கு ஆதரவு.

(5 புள்ளிகள்)

**இ) பக்தி இலக்கியம்**

- திருமுறைகள் தொகுக்கப்பட்டன.
- 14 நான்கு மெய்கண்ட சாஸ்த்திர நூல்கள் தொகுக்கப்பட்டன.
- திருத்தொண்டர் புராணம் சேக்கிழாரால் அருளப்பட்டது.
- கந்தபுராணம் கச்சியப்பர் சிவாச்சாரியாரால் அருளப்பட்டது.
- திருவிசைப்பா சேந்தனாரால் பாடப்பட்டது.
- திருப்பல்லாண்டு சேந்தனார்
- கோயில் நான் மணி மாலை, திருக்கழு மும்மணிக்கோவை – பட்டினத்தார்
- ஆழ்வார்களின் திவ்வியப்பாசுரங்களை ஸ்ரீமத் நாதமுனிகளால் தொகுக்கப்பட்டது.
- கம்பராமாயாணம் தோற்றம்
- வேதாந்த தீபம், வேதாந்த சாரம் - ஸ்ரீபாஷ்சியம், வேதாந்த சங்கிரகம், கீர்த்தனா சங்கிரகம், ஸ்ரீஸ்துதி போன்றவற்றின் தோற்றம்.
- பத்ததிகள் தோற்றம் பெற்றன.

(5 புள்ளிகள்)

**ஈ) வைணவ நெறி**

- சைவ நெறிக்கு அடுத்தபடியாக வைணவ நெறி இருந்தது. சோழ மன்னர்கள் கோயில்களைப் புதிதாக அமைத்தும் தானதருமங்கள் வழங்கியும் ஆதரவு புரிந்தனர். அது பற்றிய சாசனக் குறிப்புகள் பலவாகும்.
- ஸ்ரீரங்கம் காஞ்சிபுரம், வரதராசப் பெருமாள் கோயில்களில் சோழர்காலத் திருப்பணிகள் இன்றும் மூலஸ்தானப் பகுதிகளில் உள்ளன. எண்ணாயிரம் போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கான வைணவரை அரசர் குடியேற்றினார்கள்.
- பத்தாம் நூற்றாண்டளவில் ஆழ்வார்களின் பாடல்கள் நாலாயிரம் திவ்யப் பிரபந்தமாக ஸ்ரீ நாதமுனிகளால் தொகுக்கப்பட்டது. அதனை உபய வேதமாகத் தமிழக வைணவர்கள் ஏற்றுக் கொண்டனர். இப் பாசுரங்களைப் பெருமாள் கோயில்களில் ஓதுவதற்கு அறக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன.
- திவ்விய பிரபந்தத்திற்கு 'ஈடு' என்னும் உரை மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. அதில் முதலாம் இராஜேந்திர சோழன் புகழப்பட்டுள்ளான். தமிழக வைணவத்தின் அம்சங்களைப் பிரதிபலிக்கும் பேரிலக்கியமாக கம்பராமாயணம் விளங்குகின்றது. வைணவ ஆச்சாரியர்களில் முதன்மையாளரான இராமானுஜர் வாழ்ந்த காலம்.
- நம்மாழ்வாரின் கருத்துக்களின் அடிப்படையில் அவர் பிரஸ்தானத்திரயங்களைப் புரிந்து கொண்டு தனித்துவமான வேதாந்த தரிசனம் ஒன்றினை உருவாக்கினார். இக்காலத்திலே ஸ்ரீரங்கம் தென்னிந்திய வைணவத்தின் தலைமைக் கோயிலாகவும் ஸ்தானமாகவும் முதன்மை பெற்றது. அங்கு இராமானுஜர் ஆலய சேவைகளை புனருத்தாரணம் செய்து நிர்வாக முறையிலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். தமிழக வைணவத்தின் பொற்காலமாக இது அமைந்தது. கட்டடங்களும் சிற்பங்களும் பிரசித்தமானவை. சிதம்பரம் முதலிய சைவாலயங்களிலும் வைணவச் செல்வாக்கு காணப்படுகிறது.

(5 புள்ளிகள்)

(5x4=20 புள்ளிகள்)

agaram.lk

04. **பல்லவர்கால கட்டடக்கலை வளர்ச்சிப்படி நிலைகளை தெளிவுபடுத்துக.**

- தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக் காலம் பக்தி இயக்க காலம் என சிறப்பிக்கப்படுகின்றது.
- கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டுக்கும் இடையிலான காலம்.
- சைவசமய மறுமலர்ச்சியில் கட்டடக்கலையின் வளர்ச்சி முக்கியமானதாகும்.
- திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்த காலமாகும்.
- பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சியை நான்கு கட்டங்களாக வகைப்படுத்தி நோக்கலாம்.
  1. மகேந்திர வர்மன் பாணி (குகைக்கோயில்)
  2. நரசிம்மன் பாணி (ஒற்றக்கல் கோயில்)
  3. இராஜ சிம்மன் பாணி (கற்றளிக் கோயில்)
  4. நந்தி வர்மன் பாணி (பிற்கால கற்றளிக் கோயில்கள்)

**குகைக் கோயில்கள் :-**

கி.பி 610 – 640 வரையான காலம் மலைகளைக் குடைந்து அமைப்பது. இதனை குடை வரை, குடபோகம், குடை தளிகள் எனவும் அழைப்பர். மண்டகப்பட்டு மாமண்டூர், வல்லம், பல்லாவரம், சீய மங்கலம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் காணலாம். கருவறை,

முகமண்டபம், தாழ்வாரம் பிரதான அம்சமாக காணப்படுகின்றது. மண்டப தூண்கள் 7 அடி உயரமும் 2 அடி அகலமும் கொண்டது. தூண்களை சிங்கங்கள் தாங்குவது போலவும், மேல் பகுதியில் தாமரை இதழ் வடிவிலும் அமைக்கப்பட்டிருக்கும் கருவறையின் இரு மருங்கிலும் இரு துவார பாலகர்கள் காட்சி தருகின்றார்கள், சுவர்களில் மிருகங்கள், பறவைகள், புடைப்பு சிற்பமாக காணப்படுகின்றது. கருவறையில் பட்டை தீட்டப்படாத லிங்கங்கள் காணப்படுகின்றன.

**ஒற்றைக்கல் கோயில்கள் :-**

கி.பி 640 – 680 வரையான காலம். தனிப்பாறையை செதுக்கி அமைக்கப்படுவது. இதனை மலைதளிகள், ரதக்கோயில்கள் என்றும் அழைப்பர். ஏகதள விமானம், தூங்கானை மாடவிமானம் காணப்படும். மாமல்லபுரம் மலைத் தளிகள் மகாபாரதப் கதாபாத்திரங்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நாகர, திராவிடக் கலைப்பாணியில் அமைந்த தர்மராஜரதம் மூன்று தளங்களைக் கொண்டது. இந்து சமயச் சார்புடைய பல சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை "சிற்ப கலை களஞ்சியம்" என்று போற்றப்படுகின்றது.

**இராஜசிம்மன் பாணி :-**

கி.பி 690 – 800 வரையான காலம் சிறு சிறு கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் காட்டுவதாகும். ஆகம சிற்ப பிரமாணத்தின் படி மூலஸ்தானம், அர்த்த மண்டபம், பலிபீடம், திருச்சுற்று மாளிகை போன்ற முழு கட்டடக்கலை அம்சங்கள் கொண்டு அமைந்ததாகும். மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், பனைமலைக் கோயில், காஞ்சிபுர வைகுந்தப் பெருமாள் கோயில் பற்றிய குறிப்புக்களும் விளக்கங்களும்.

**நந்திவர்மன் பாணி :-**

கி.பி 800 – 900 வரையான காலமாகும். கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் கட்டுவதாகும். இங்கும் எல்லா வித கட்டட அம்சங்களும் காணப்படுகிறது. இவை அளவில் சிறியவை. காஞ்சி முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர், வாடாமல்லீஸ்வரர் போன்றவை அரைவட்ட வடிவில் அமைந்துள்ளன. சகாதேவ ரதத்தை முன்மாதிரியாகக் கொண்டவை.

(20 புள்ளிகள்)

agaram.lk

05. **இந்துசமய சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய ஆரிய சமாஜத்தின் பணிகளை மதிப்பிடுக.**

- நவயுக இந்தியாவில் இந்து சமய – சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஆரிய சமாஜத்திற்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.
- பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இந்தியாவில் இந்து சமய – சமூகங்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது.
- சுவாமி தயானந்த சரஸ்வதி வேத நெறியையும், சமஸ்கிருத மொழியையும் முன்மைப்படுத்தி 1875 ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரிய சமாஜத்தை பம்பாயில் நிறுவினார்.
- இந்து சமுதாயத்தினர் எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியிருந்த சவால்கள் பலவற்றிற்கு ஆரியசமாஜத்தின் வாயிலாக விடைகொடுத்தார்.
- இத்தகைய ஆரியசமாஜம் இந்து சமுதாயத்தினருக்கு பல்வேறு வழிகளிலும் பல பணிகளைச் செய்து இந்துமத எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது.
- மூட நம்பிக்கைகளை இந்து சமுதாயத்தில் இருந்து விரட்டுதல், புரோகித முறை எதிர்ப்பு, விக்கிரக வழிபாடு எதிர்ப்பு, சாதிபேத எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை ஆதரவு முதலானவற்றிற்கு வேதங்களில் சான்று காட்டி நிரூபித்தல்.
- சாதி, மத, பால் வேற்றுமைகள் பாராமல் மக்கள் மொழிகளில் வேதங்களை மொழி பெயர்த்துப் பரவலான முறையில் பரப்பி மக்களை விழிப்படையச் செய்தமை.
- சுதேச கல்வி முறைக்கும், சமய – விஞ்ஞான பிணைப்பிற்கும் வேதம் வழிகாட்டவல்லது. என்ற கொள்கை பரப்பப்பட்டது.
- நூல்களை வெளியிட்டமை அதாவது ரிக்வேத பாஷ்ய பூமிகா (1877), ரிக்வேத பாஷ்யம் (1899), யசுர்வேத பாஷ்யம் உட்பட 26 நூல்கள் வெளியிடப்பட்டது.
- இவரது நூல்களீ சத்தியார்த்தப் பிரகாசம் குறிப்பிடத்தக்கது.
- சமய பிரசாரம் செய்தமை. அதாவது கூட்டாக இணைந்து சுற்றுப்பயணங்கள் செய்து 1845 – 1860 வரைக்குமான காலங்களில் இந்தியா முழுவதும் சென்று சமயப்பிரசாரம் செய்தமை.
- மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட 'சுத்தி' என்னும் இயக்கத்தையும், இந்துக்களை ஒன்று திரட்ட 'சங்கடனம்' என்ற இயக்கத்தையும் தயானந்தர் தாபிப்பதற்கு ஆரியசமாஜமே அடிப்படை எனலாம்.
- ஆரிய சுக்திச் சடங்கு விதிகளை உருவாக்கியமை. அதாவது ஹோமம், தலைமுடி களைதல், பூணூல் அணிவித்தல், காய்த்ரி மந்திரம் கற்பித்தல் ஆரியசமாஜத்தின் பத்துக்கோட்பாடுகளை ஒப்புக் கொள்ளச் செய்தல் ஆகியவை அந்த விதிகளாகும்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூணூல் அனுவித்து அவர்களை மேன்மைக்களாகப் பிரகடனப்படுத்தியமை. 1888 இல் பஞ்சாப்பில் முஸபர்கட் மாவட்டத்தில் பண்டித கங்காரம் எனும் ஆரியசமாஜப் பிரசாரகர் ஓட் தீண்டாதார் சமூகத்தினை பூணூல் அணுவித்து இந்து சமூகத்திற்குள் கொண்டு வந்தமை.
- தேசிய கல்வி முறையினை ஆரியசாஜம் நடைமுறைப்படுத்திச் சாதனை படைத்தது. அதாவது தாய் நாட்டின் இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், கலை, அரசியல், போர்முறை, உற்பத்தித்திறன், தொழில், வாணிபம், ஆகியவற்றை வளர்த்தெடுத்தல்.
- பால்ய விவாகத்தை எதிர்த்தமை பிரம்ம புராணத்தையும், மனுதர்ம சாத்திரத்தையும் ஆதாரம் காட்டி பால்ய விவாகத்தைக் கண்டனம் செய்துள்ளமை.
- விதவை பெண்களின் மறுமணத்தினை ஆதரித்தமை. ரிக் வேதத்தினை ஆதாரம் காட்டி விளக்கப்பட்டுள்ளது.

agaram.lk

- தயானந்தர் உருவாக்கிய ஆரிய சமாஜம் பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலான பிரதேசங்களில் செல்வாக்குடனும், பிற தேசங்களில் காலூன்றியும் வெகுஜன இயக்கமாக, கல்வி இயக்கமாக, தீண்டாமை எதிர்ப்பு இயக்கமாக,
- பெண்ணுரிமை இயக்கமாக, சமூக சீர்திருத்த இயக்கமாக, தேசிய இயக்கமாக வளர்ச்சி பெற்று விளங்கிற்கு.

*(20 புள்ளிகள்)*

*06.* **திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைகளில் இசைக்கலை பெறும் முக்கியத்துவத்தினை பரிசீலிக்குக.**

- திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைகளில் இசைக்கலை முக்கியமானதாகும்.
- இசை இயைபுபடுத்தும் சாதனமாகும்.
- இறைவனே இசை வடிவினன் (நாதப் பிரமம்) என்பது இந்து மத நம்பிக்கை.
- இசை இன்பத்தை தருவது மட்டுமன்றி ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பத்தை தரவல்லது.
- இந்துப் பண்பாட்டில் இசைக்கலை மிக உன்னதமான கலையாகும்.
- இசைக்கும் இறைவனுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றது. (உ+ம் சிவன், உடுக்கு, சரஸ்வதி – வீணை, கண்ணன் - புல்லாங்குழல், சங்கு)
- வட இந்திய, தென் இந்திய வரலாற்றுக் காலங்களில் இசைக் கலையின் செல்வாக்குகளை விளக்குதல்.
- இறைவழிபாட்டில் தோத்திரங்கள், கீர்த்தனங்கள், பஜனைகள், கீத வாத்தியங்கள் பற்றிய குறிப்புக்கள்.
- இசை வளர்ச்சியில் மும்மூர்த்திகளின் பங்களிப்பு.
- விபுலானந்தரின் யாழ் நூல் சிறந்த இசை நூலாகும்.
- கோயில் சிற்பங்களில் இசைக் கருவிகளின் முக்கியத்துவம்.
- பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இசை ஒரு பாடமாகக் கற்ப்பிக்கின்றமை.
- இசைக்கருவிகள் ஆலய வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டமை. பஞ்சபுராணம் பாடும் மரபு தோன்றியமை.
- தற்காலத்தில் உலக ரீதியில் இசையின் செல்வாக்கும் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடல்.

*(20 புள்ளிகள்)*

*07.* **பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சி நிலையை விளக்குக.**

✦ இலங்கையில் சோழர் ஆதிக்கத்தின் போது பொலன்னறுவைக்கால இந்து சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

✦ இலங்கையிற் பொலன்னறுவைக் காலம் இரண்டு கட்டங்களைக் கொண்டதாகும்.

முதலாம் கட்டம் :- கி.பி 1000 – 1070 வரையிலான காலமாகும். இக்காலத்தில் சோழ அரசர்கள் நேரடியாகவே பொலன்னறுவை, மாதோட்டம், பதவியா முதலிய இடங்களில் ஆட்சி செய்தனர்.

இரண்டாம் கட்டம் :- கி.பி 1070 – 1250 வரையிலான கால கட்டம் இக்காலப்பகுதியில் தமிழகம் தொடற்பிற் பௌத்த அரசர்களும் பொலன்னறுவையை இராசதானியாகக் கொண்டு ஆண்டனர். இக்காலத்தில் இந்து சமயத்திற்கும், இந்து நிறுவனங்களுக்கும் பௌத்த அரசர்கள் சிலர் ஆதரவு வழங்கினர்.

agaram.lk

பொலன்னறுவை, மாந்தை நிலாவெளி, மானாங்கேணி ஆகிய இடங்களிற்கு கண்டெடுக்கப்பட்ட சாசனங்கள் ஆலய தர்மங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. நானாதேசிகன், ஐந்நூற்றுவர், வளஞ்சியர், பன்மாகேஸ்வரர், பட்டர், தேவரடியார் ஆகியோர் பொலன்னறுவைக் கோயில்களிற் செய்த பணிகள் தானங்கள் பிரதானமானவை. இதனால் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான உறவு வலுவடையத் தமிழகப் பண்பாடு மேலும் பரவலாயிற்று.

இக்காலத்தில் இலங்கை "மும்முடிச் சேரி மண்டலம்" என அழைக்கப்பட்டது. அவ்வேளையில் கலிங்க நாடு, பாண்டி நாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டன. கோயிற் கலைஞர்கள், சிற்பிகள் இலங்கையிற் புதிய கோயில்களை அமைத்தனர். அத்துடன் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன.

திருக்கேதீஸ்வரம் ராஜராஜஈஸ்வரம் எனவும் அழைக்கப்பட்டது. அதற்கு நிபந்தங்களும் திருவிளக்கு எரிப்பதற்கான தானங்களும் வழங்கப்பட்டன. அத்தோடு வானவன்மாதேவி ஈஸ்வரம், உத்தம சோளேஸ்வரம், பண்டித சோளேஸ்வரம், திருவிராமேஸ்வரம், விக்கிரம சலாமேக ஈஸ்வரம் ஆகிய புதிய ஆலயங்களும் அமைக்கப்பட்டன. ஆலயங்களுக்கு அண்மையிற் சதுர்வேதிமங்கலங்கள் அமைக்கப்பட்டன. அங்கு ஆடல், பாடல் முதலிய விடயங்களுடன் இந்து சமய விழாக்களும் இடம்பெற்றன. பொலன்னறுவையில் இந்துப் படிமங்கள் வார்க்கப்பட்டன. காரைக்கால் அம்மையார், நடராசர், விநாயகர் படிமங்கள் வழிபடப்பட்டன. திருவிழாக்களிலும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. நாயன்மார் வழிபாடுகளும் முதன்மை பெற்றன.

பொலன்னறுவைக் காலத்தைத் தொடர்ந்து கலிங்க மாகோன், குளக்கோட்டன் வரலாறுகள் பிரதானம் ஆனவை. கிழக்கிழங்கையின் இந்துப் பண்பாடு இக் காலத்தில் வளர்ச்சியடைந்தது. வீரசைவம் கிழக்கிலங்கையில் வளர்ச்சியடைந்தது. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம் இந்து கலாசார மரபில் மேலும் பெருமை பெற்றது. வட இலங்கையிலும் தொண்டைமானாறு மாவிட்டபுரம், உரும்பிராய் முதலிய இடங்களிலும் சோழர்காலம் பண்பாட்டின் செல்வாக்கைக் காண முடிகிறது.

*(20 புள்ளிகள்)*

agaram.lk

*08.* **வட இந்தியாவில் தமிழகப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கினை விளக்கி ஆராய்க.**

- வட இந்தியாவில் மத்திய காலப்பகுதியை அடுத்து பக்தி இயக்கம் தோன்றுவதற்கு சமகால சமய, சமூக சூழ்நிலைகள் காரணங்களாக அமைந்தன.
- தமிழகத்தில் பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி இயக்கமும், மராட்டிய மாநிலத்தில் தோன்றிய பக்தி நெறியும் இப்பக்தி இயக்கத்தின் உருவாக்கத்திற்கு அதிகளவு பங்களிப்பினைச் செய்தன.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆச்சரியார்கள் என்று பலரும் தமிழகத்துப் பக்தி நெறியை வளர்த்தனர்.
- இவ்வடியவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழகப் பக்தி இயக்கத்தின் பல்வேறு பண்புகளும் வட இந்தியப் பக்தி இயக்கத்தில் வெளிப்படுவதனைக் காணலாம்.
- பிற சமயங்களின் எழுச்சியே இவ்விரு பிரதேசங்களிலும் பக்தி இயக்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.
  - சமண, பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பெற்ற எழுச்சியும் அதனால் இந்து சமயம் பெற்ற வீழ்ச்சியும் பல்லவர் காலப் பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பர்.
  - அதேபோல் இஸ்லாமிய சமயத்தின் வருகையும் அதன் வளர்ச்சியும் வட இந்தியப் பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பர்.

- பல்லவர் கால அடியவர்கள், இராமனுசர், இராமானந்தர் முதலான தமிழகப் பக்தி நெறியாளர்களின் போதனைகள் வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் பணிகளுக்கு அதிகளவு பங்களிப்புகளைச் செய்தன.
- தமிழகத்தில் சைவ, வைணவ பக்தி இயக்கத்தினர் தமது தாய்மொழியான தமிழில் மேற்கொண்ட செயற்பாடுகள், வட இந்தியப் பக்தி நெறியாளர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தன. அவர்களும் தத்தமது பிரதேச மொழிகளில் பக்திசார் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

  உதாரணம் :- குஜராத்தி, வங்காளி,ஹிந்தி, மார்வாரி.
- சமஸ்கிருத மொழி சார்ந்த சமய நம்பிக்கைகளுக்கும், தமிழகப் பக்தி இயக்கத்தவர்கள் முக்கியத்துவம் கொடுத்தமை போலவே, வட இந்தியப் பக்தி நெறியாளர்களும் முதன்மைத்துவம் கொடுத்தனர்.
  - சமஸ்கிருத மொழியில் எழுந்த இலக்கியங்கள் கூறும் கருத்துக்களைத் தமது பிரசாரத்திற்குப் பயன்படுத்தினர்.
  - வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், பகவத்கீதை முதலான சமஸ்கிருத இலக்கியங்களை குறிப்பிடலாம்.
  - கபீர்தாசர் ‘இதயங்கள் உள்ளன்போடு கூடும் இடம் வேதமும் குரானுமே’ என்று வேதத்தை திருக்குரானுக்கு நிகராகக் குறிப்பிடுகிறார்.
  - மீராபாய் ‘கண்ணன் வாங்கலையோ கண்ணன் வாங்கலையோ’ என்று புராணங்கள் கூறும் கிருஷ்ண அவதாரத்தைப் பாடுகிறார்.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள் கையாண்ட தோத்திர மரபின் தொடர்ச்சியை வட இந்தியப் பக்தி இயக்கத்திலும் காணலாம்.
  - நாயன்மார்களின் பாடல்கள் தேவாரங்களாகவும், ஆழ்வார் பாடல்கள் பாசுரங்களாகவும் அமைந்தன.
  - வட இந்தியப் பக்தி இயக்கத்தவர்களுடைய பாடல்கள் பஜனைப் பாடல்களாகவும், கீர்த்தனைகளாகவும் அமைந்தன.
  - கபீர்பந்தி, ராககோவிந், ருக்மணி மங்களம் போன்ற பஜனைப் பாடல்கள் அவற்றுட் சிலவாகும்.
  - பவார்த்த தீபிகா, தாசபோதம், சத்போதம் முதலான இலக்கியங்களையும் வட இந்தியப் பக்தி இயக்கத்தவர்கள் இயற்றினர்.
- பல்லவர் கால பக்தி இயக்கத்தில் காணப்பட்ட சமத்துவ நோக்கு, சமூக சேவை போன்ற பண்புகள் வட இந்தியப் பக்தி இயக்கத்திலும் உண்டு.
- இரு வேறு பக்தி இயக்கத்தவர்களும் சாதி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் அன்பு என்னும் பக்தி மார்க்கத்தால் ஒன்றுபட்டனர்.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்கள் சிறப்பாக இன மத பேதமின்றி, ஒன்றுபட்டுச் செயற்பட்டனர்.
  - வட இந்தியப் பக்தி நெறியாளர்களுள் ஞானேஸ்வரர் பிராமணராகவும், துர்க்கா ராம் வர்த்தகராகவும் விளங்கினர்.
  - இந்து - இஸ்லாமிய சமயத்தவர்களினுடைய ஒற்றுமையின் சின்னமாக கபீர்தாசர் விளங்கினார்.

(20 புள்ளிகள்)

agaram.lk